**OS No.41/2022**

**PW–1 –விபுலனந்தி**

**த/பெ.**

**நாள். 05.03.2026**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .2–ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையை 1ம் மற்றும் 3ம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்.</u>**

1.நான் பிசியோதெரபியில் பட்டப்படிப்பு முடித்து மேல் படிப்பு படித்து இருக்கிறேன். முதல் பிரதிவாதி என்னுடைய கணவர். எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் பிறந்தவர்தான் வாதி என்று சொன்னால் ஆமாம். இரண்டாம் பிரதிவாதி வள்ளியம்மாள் என் கணவர் முதல் பிரதிவாதியான பிரபுவின் தாயார்.

2.எனக்கு திருமணத்திற்கு முன்பு முதல் பிரதிவாதியின் குடும்ப சொத்துக்கள் பற்றி தெரியாது. என்னுடைய திருமணம் 2006 ஆம் ஆண்டு நடந்தது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் இரண்டாவது வழக்கு சொத்தான திருநீலகண்ட புரத்தில் இருக்கும் வீடு எப்போது வாங்கப்பட்டது என்று கேட்டால் ஞாபகம் இல்லை. மொத்தம் நான்கு சொத்துக்கள் கேட்டு இந்த வழக்கு போட்டு இருக்கிறேன்.

3. திருநீலகண்ட புரத்தில் இரண்டு சொத்துக்களும் அதில் ஒன்று என் மாமனாரின் அப்பாவிற்குபாத்தியப்பட்டு வந்த சொத்தாகும். மற்றொரு சொத்தானது கொடிக்கம்பம் என்ற இடத்தில் இருக்கிறது. இளங்கோ நகர் என்ற இடத்தில் ஒரு சொத்து இருக்கிறது. நான் சொல்வது போல் நான்கு வெவ்வேறு சொத்துகளுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவே இல்லை என்றும் எனக்கு வழக்கு விவரங்களை தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4. மேற்சொன்ன நான்கு சொத்துக்களுக்கான ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம் செய்து இருக்கிறேன். இந்த வழக்கில் அனைத்து சொத்துக்களின் கிரைய பத்திரமும் அதன் வில்லங்க சான்றிதழும் தாக்கல் செய்திருக்கிறேன். கொடிக்கம்பம் என்ற இடத்தில் இருக்கும் சொத்தானது என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். காதர் பேட்டையில் நானும் என் கணவரும் ஒரு சொத்து வாங்கி இருந்தோம் என்று சொன்னால் சரியல்ல முதலில் ஒப்பந்தம் மட்டுமே போட்டு இருந்தோம் அதன் பின்பு அதில் பிரச்சினையாகி விட்டதால் பின்பு செட்டில்மெண்ட் பேசி முடித்து விட்டோம்.

5. திருமுருகன்பூண்டி என்ற இடத்தில் என்னுடைய பெயரில் சொத்து வாங்கி இருந்தேன். நானும் என் கணவரும் சேர்ந்து எம்.எஸ் நகர் என்ற இடத்தில் இரண்டு சொத்துக்கள் கிரயம் வாங்கினோம். அந்த இரண்டு சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் ஆமாம்.

6. என்னுடைய பெயரிலும் என் கணவர் பெயரிலும் இருக்கும் சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. திருநீலகண்ட புறத்தில் இருக்கும் ஒரு தாவா சொத்தை இந்த வழக்கின் பிரதிவாதியான வள்ளியம்மா 1994 கிரயம் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அதற்கு உண்டான கிரைய தொகையும் வள்ளியம்மாளே செலுத்தியதாக தான் கிரைய பத்திரத்தில் காணப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அப்படித்தான் இருக்கிறது. மேற்சொன்ன திருநீலகண்ட புறத்தில் இருக்கும் சொத்தின் பட்டாவும் வள்ளியம்மாள் பெயர்தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.

7. வள்ளியம்மாள் தான் திருநீலகண்ட புறத்தில் இருக்கும் அவருடைய சொத்துக்கு மாநகராட்சி வரியும் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். அவர் தான் அங்கு குடியிருந்தும் வருகிறார் என்று சொன்னாலும் சரிதான். மற்றொரு சொத்து வெங்கடாச்சலம் தொட்டி பாளையத்தில்

தன்னுடைய பெயரில் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய பத்திரத்திலும் வெங்கடாசலம் தான் கிரைய தொகையை செலுத்தியதாக காணப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான் அப்படித்தான் இருக்கிறது. அதற்கு உண்டான வரி வகையறாக்கள் வெங்கடாசலம் தான் செலுத்தி வந்தார் என்றும் சொன்னால் சரிதான்.

8. வெங்கடாசலம் 2014 ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார் என்றும் சொன்னால் சரிதான். வெங்கடாசலம் காலமானதற்கு பின்பு அவருடைய வாரிசுதாரர்கள் சொத்தினை அவர்களுடைய பெயருக்கு மாற்றிக் கொண்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். அதன் பின்பு அவர்கள்செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான் ஆனால் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றும் அதில் என் மகளுக்கு பாகம் இருக்கிறது என்றும் கேட்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன்.

9. வெங்கடாசலம் தன்னுடைய காலத்தின் போது ரியல் எஸ்டேட் மற்றும் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அவர் அந்த வருமானத்தை வைத்து தான்தொட்டிபாளையம் சொத்தை கிரயம் பெற்று இருந்தால் என்று சொன்னால் சரிதான். அவர் இருக்கும் வரையில் அந்த சொத்தினை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் ஆமாம். என்னுடைய கணவரின் குடும்பத்திற்கு பூர்வீக சொத்து இருந்தது என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. என் கணவரின் குடும்பத்திற்கு பூர்வீக சொத்து எதுவும் கிடையாது என்றும் எல்லா சொத்துக்களும் அவர்கள் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா தாக்கல் செய்திருக்கும் தாவா சொத்துக்கள் அனைத்தும் என் கணவர் குடும்பத்தார் சுயமாக சம்பாதித்து கிரயம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பெயரிலும் என் கணவர் பெயரிலும் ஆகிய சொத்துக்கள் அனைத்தும் எங்கள் திருமணத்திற்கு பின்பு வாங்கியவை தான் என்றும் சொன்னால் சரிதான்.

11. என்னுடைய பெயருக்கு எந்தவிதமான வருமானமும் எனக்கு இல்லை என்றும் என் கணவரின் வருமானத்தை வைத்துதான் சொத்துக்கள் வாங்கி இருக்கிறோம் நாங்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துகள் எனக்கும் என் மகளுக்கும் எந்தவிதமான உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது கே.பி.என் காலனி என்ற இடத்தில் வசித்து வருகிறேன். இந்த பிரமான பத்திரிக்கையில் தற்போது வரை திருநீலகண்டபுரம் முகவரியில் நான் குடியிருந்த வருவதாக சொல்லப்பட்டு இருப்பது தவறான விபரம் என்றால் சரியல்ல பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் அங்கு தான் குடியிருந்து வந்தேன்.

12. நான் திருநீலகண்ட புறத்தில் தான் குடியிருந்தேன் என்பதை நிரூபிக்க எந்த விதமான ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய ஆதார் கார்டு முகவரி அதுதான். இந்த ஒரு வழக்கு தான் நான் என் கணவருடன் சேர்ந்து வாழும் போது தாக்கல் செய்த வழக்காகும் மற்ற அனைத்து வழக்குகளும் என் கணவரை பிரிந்த பின்பு நான் கே.பி.என் காலனிக்கு வந்த பின்பு தாக்கல் செய்த வழக்குகள் ஆகும். நான் எப்போதும் திருநீலகண்டபுரம் முகவரியில் வசித்து வரவே இல்லை என்று சொன்னால் சரியல்ல.

13. நகை அடமானம் வைத்திருப்பதாக சொல்லப்படும் விவரங்கள் எல்லாம் வழக்கத்திற்கு பின்னிட்டவை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் நகை கடை நகை அடமான ரசீதுகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரி அல்ல என் பெயரில் என் கணவர் கடன் ஏற்படுத்தியிருந்தார் அதை நிரூபிக்கத்தான் இந்த ரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய பெயரில் இருக்கும் சொத்து பத்திரங்கள் மற்றும் என்னுடைய கணவரின் பெயரில் இருக்கும் சொத்து பத்திரங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அவை அனைத்தும் ஈபி நடவடிக்கையில் இருப்பதாக இருப்பதால் தாக்கல்

செய்யவில்லை அவற்றின் சான்று நகல் தாக்கல் செய்திருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல.

14. இந்த வழக்கு சொத்தில் ஒருபோதும் நான் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரி அல்ல 15 ஆண்டுகளாக அந்த வீட்டில் தான் நான் குடியிருந்து வந்தேன். அவர்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வந்துவிட்டது என்றும் அதன்படி அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரி அல்ல. வாதி வெங்கடாசலத்தின் சொத்தில் அல்லது வள்ளியம்மாவின் சொத்தில் உரிமை கோர எந்தவித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.05 19:12:00 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.